11th August 1965]

இருக்கிறது. ரிட் பெட்டிஷன் டிஸ்மிஸ் ஆனால், அதன்மேல் அப்பீல் இருக்கிறது. அப்பீல் பெண்டிங்காக இருக்கிறது. விவரத்தை எப்படிச் சொல்லுவது ?

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : சார், அநேக இடங்களில் பாரம்பரை ட்ரஸ்டிகள், பண்டார சன்னதிகள் போன்றவர்கள் இருக்கும் இடங்களில் அடிஷனல் ட்ரஸ்டி போடுகிறார்களே, அந்த மாதிரி இந்தக் கோவிலுக்கும் போட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த அந்த தேவஸ்தானத்தின் ஸ்கீமைப் பொறுத்தது அது.

திரு. ஜே. மாதா கவுடர் : சார், மடாதிபதிகளெல்லாம், அரசியல் கொடியைப் பிடிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே, இப்பொழுதும் இந்த மடாதிபதிகளை வைத்திருப்பது சரியா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் சட்டத்தில் ஒன்றும் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, காணமல் போன சிலைகள், ஆபரணங்கள் இவற்றின் மதிப்பு என்ன என்று கூற முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போய்ப் பார்த்தால்தானே தெரியும். பார்க்கவேதான் முடியவில்லையே.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த ஆலயம் திருப்திகரமாக நடக்கிறதில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றனவா ? அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இம்மாதிரிப் புகார்கள் வந்திருகின்றன. அறநிலைய சட்டத்திற்குள்ளே என்ன செய்ய முடியுமோ அதைச் செய்து வருகிறார்கள்.

Old Age Pension Scheme in Madurai district

* 195. *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of applications received so far, claiming Old Age Pension from Madras City and other taluks of Madurai district;

(*b*) the number among them granted; and

(*c*) the number of applications pending disposal for over six months?

கனம் திரு. எம். பக்தவத்சலம் :

	மதுரை மாநகர்.	மதுரை மாவட்டத்திலுள்ள மற்ற தாலுகாக்கள்.
(அ)	6,315	23,512
(இ)	816	5,152
(உ)	139	422

திரு. வை. சங்கரன் : சார், இந்தத் தொகையைப் பார்த்தால், 10 அல்லது 15 பர்செண்டுக்கு மேல் அவர்களுக்கு வழங்கப் படுவதில்லை. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், காலதாமதம்தான். பல வருஷங்கள் இருக்கக்கூடியவர்கள்கூட கவலையால் சீக்கிரமே இறந்து விடுகிறார்கள். ஆகவே, விண்ணப் பங்கள் வந்து மூன்று மாதத்திற்குள் டிஸ்போஸ் செய்யவேண்டும் என்று உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டிஸ்போஸ் செய்யாமல் இருப் பது குறைவு. இதெல்லாம் பரிசீலனை செய்து கொடுக்கப்பட வேண்டும். தவறுதல் ஏற்படக் கூடாது. தாசில்தார் பரிசீலனை செய்து கொடுப்பதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை. அதுமட்டுமின்றி அதையெல்லாம் விசாரணை செய்து முடிவெடுக்க வேண்டும்.

திரு. வை. சங்கரன் : சார், அப்ளை செய்யும் முதியோர்கள், மூன்று வித நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. ஒன்று வோட்டர் லிஸ்டில் பெயர் இருக்கிறதா என்றும், ஏஜ் சம்பந்தமாக சர்ட்டிபிகேட்டும், மூன்றாவது பாஸ்போர்ட் ஸைஸ் போட்டோ, என்று இப்படி ஒன்றன் பின் ஒன்றாக அவர்களால் வாங்க முடியவில்லை. இப்படிப்பட்டவர்களில் அநாதைகளும் இருக்கிறார்கள். இதையெல்லாம் சர்க்காரே செய்துவிட்டு, பென் ஷன் வந்த பிறகு அந்தச் செலவைக் கழித்துக்கொள்ளும் வகையில் இதைச் செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதியோர் பென்ஷன் திட் டத்தை இந்த சர்க்கார் ஏற்றுக்கொண்டதிலிருந்து எத்தனை பேர் களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற புள்ளிவிவரங்களைப் பார்த்தாலே அரசாங்கம் தாராளமாக கொடுத்து வருகிறார்கள் என்பது தெரியும். அப்படிச் செய்கிறபோது, முதியோர் பென்ஷன் கொடுப்பதில் தவறுதல்கள் வராத வண்ணம் செய்யப்படுகிறது. அதில் தவிர்க்கக்கூடிய தாமதம் ஒன்றும் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சார், முதியோர் பென்ஷன் கொடுப்பதில், இப்போது அந்த அந்த வட்டத்தில் இருக்கும் தாசில்தாரே விசாரித்து நடவடிக்கை எடுக்கிறார். ஏற்கனவே, ஒரு தனி தாசில்தார் போட்டு இருந்தார்கள். அந்த போஸ்டை இப்பொழுது எடுத்து விட்டால்தான் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்வது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே, அதிகமான மனுக் கள் இருந்தபோது, தனி தாசில்தார் போடப்பட்டு இருந்தது. இப்பொழுதும் அவசியம் இருந்தால், மீண்டும் போடுவார்கள். முதலிலே ஒரு "ஃப்ளஷ்" இருந்தது. அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு விட்டது. இப்பொழுது அதிக அவசியம் இல்லாத நிலையில், இருக்கிற தாசில்தார்களே கவனிக்கிறார்கள். அதிகமாக மனுக்கள் வந்தால் அதற்கான தனி ஏற்பாடுகள் செய்யப்படும்.

11th August 1965]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பொதுவாக, மனுக்களைப் பரிசீலனை செய்யும்போது, ஏற்கெனவே கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் எவ்வளவு காலியாகிறதோ, அத்தனை இடங்களுக்குத்தான் சாங்க்ஷன் செய்யவேண்டும் என்று ஏதாகிலும் உத்தரவு இருக்கிறதா ? அல்லது உரியவர்கள் அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டும் என்று செய்வார்களா ? அதற்கான உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி ஒன்றும் தடையில்லை. நன்ருகப் பரிசீலனை செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற, வயது முதிர்ந்த முதியோர்களுக்கு உதவித் தொகை அளிப்பதுபோல, ஆதரவற்ற, வேறு எந்தத் தொழிலும் செய்து வருவாய் தேட முடியாது இருக்கும் அங்கக் குறைவுள்ளவர்களுக்கும் உதவித் தொகை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கக்குறைவு உள்ளவர்களுக்கு வயது குறைவாக இருக்கலாம் என்று போட்டு இருக்கிருேம். மேலும் இது விஸ்தரிக்கப்படும் வகையில் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, காலதாமதம் காரணமாக, முதியோர்களில் பலர் இப் பென்ஷனை வாங்குவதற்கு முன்பே இறந்து விடுகிருர்கள். ஆகவே, ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தனி தாசில்தார் என்ருவது போட்டு இவற்றை பரிசீலனை செய்யக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தாசில்தார் என்று போட்டு மூன்று தாலுகாக்களுக்கு அவர் போவதைவிட அந்த அந்த தாலுகா தாசில்தாரே கவனிப்பது தான் நலம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, மதுரை ஜில்லாவைப் பொருத்தவரையில், ஏற்கனவே பென்ஷன் கொடுக்கப்பட்டவர்கள் நடமாடுகிருர்கள், அதற்கான சக்தி வந்துவிட்டது என்று அவர்களுக்கு தொகை கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அதை மீண்டும் கொடுக்க அமைச்சர் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாகக் கேள்வி கேட்டால் எப்படிச் சொல்வது ? குறிப்பாக, யாருக்காவது கொடுத்தார்கள், நிறுத்தி விட்டார்கள் என்ருல், அதைப் பரிசீலனை செய்து விடை அளிக்கலாம்.